# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.M.C.10/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | எ.ம.சா.3 |
| Name | : | கோமதி |
| Father's Name | : | க.பெ.அந்தோனி |
| Village | : | செய்யாறு |
| Taluk | : | செய்யாறு |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | 32 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 26.03.2026.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் எதிர்மனுதாரார் தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். எனது தரப்பு சாட்சியை ஏற்றுகொள்ளுமாறு கனம் கோர்ட்டார் அவர்களை பிரார்த்திக்கிறேன்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.ஏ., ஆங்கிலம் படித்துள்ளேன். என்ன வேலை செய்கிறேன் என்றால் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எனது பூர்வீக ஊர் சிறுங்கட்டூர் என்றால் இல்லை அது எனது மாமியார் ஊராகும், எனது பூர்வீகம் செய்யாறு ஆகும். எதிர்மனுதாரர் எனக்கு உறவினர் என்றால் இல்லை பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். எத்தனை ஆண்டுகளாக செய்யாறு அவுசிங் போடில் வசித்து வருகிறேன் என்றால் 25 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். எதிர்மனுதாரர் எத்தனை ஆண்டுகளாக அங்கு வசிக்கிறார் என்றால் எனக்கு விவரம் தெரியும் நாள்முதல் அவுசிங் போடில் வசித்து வருகிறார். மனுதாரர் எதற்காக எதிர்மனுதாரர்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஜீவனாம்சம்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் எத்தனை பிள்ளைகள் என்றால இரண்டு மகன்கள் உள்ளார். அவர்களின் பெயர்கள் ஒருவர் பெயர் பிரதாப் ஆகும் மற்றொருவர் பெயர் ஞாபகம் இல்லை. மேற்படி பிரதாப் மற்றும் மற்றொரு மகனின் வயது தெரியுமா என்றால் தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் மனுதார்களின் மகன்களை எதிர்மனுதாரர்தான படிக்க வைத்ததாக கூறியுள்ளேன் ஆனால் அவர்கள் என்ன படித்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது.

மேலும் எனது நிரூபண வாக்குமூலத்தில் மனுதாரரின் இரண்டு மகன்களுக்கும் திருமண செலவுகளை எதிர்மனுதாரர்தான் செய்ததாக கூறியுள்ளேன், அவர்களுக்கு எங்கு திருமணம் நடைபெற்றது என்றால் செய்யாரில் நடந்தது. திருமணம் எந்த இடத்தில் நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. அந்த திருமணத்திற்கு நான் சென்றேனா என்றால் இல்லை. அதனால் எதிர்மனுதாரர் திருமணச்செலவுகள் செய்த விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும் எதிர்மனுதாராதான் செய்தார்.

எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எதிர்மனுதாரர் செலவுகள் செய்த விவரம் தெரியும் எவ்வளவு செலவு செய்தார் என்றால் தெரியாது. எதிர்மனுதாரர் எதற்கு எவ்வளவு செலவு செய்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும் ஆனால் எவ்வளவு செலவு செய்தார் என்று எனக்கு தெரியாது. மனுதாரரின் மகன்களை கடைசியா எப்போது பார்த்தேன் என்றால் எதிர்மனுதாரரின் 2ம் மனைவியின் மகள் திருமணத்தின்போது பார்த்தேன்.

எதிர்மனுதாரா மின்சார வாரியத்தில் என்ன வேலை பார்த்தா என்றால் எல்.ஐ (லைன் இனஸ்பெக்டர்). எதிர்மனுதாரர் அவரது வருமானம் என்ன அவரது செலவு என்ன என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரருக்கு என்ன நோய் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும் அவருக்கு சுகர் மற்றும் பி.பி உள்ளது. எதிர்மனுதாரருக்கு செய்யார் அவுசிங் போர்டில் உள்ள வீடு சொந்த வீடா என்றால் இல்லை வாடகை வீடாகும். செய்யாரில் எதிர்மனுதாரருக்கு வேறு சொத்துக்கள் உள்ள விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

மனுதாரரை நான் இன்றுதான் பார்க்கிறேனா என்றால் சாட்சி யோசித்துவிட்டு இதற்கு முன்பு ஒருமுறை எதிர்மனுதாரர் குடியிருக்கும் செய்யாறு வீட்டில் வந்து சண்டைபோட்டபோது பார்த்துள்ளேன். மனுதாரர் என்ன காரணத்திற்காக சண்டைபோட்டார் என்று எனக்கு தெரியாது. நான் எதிர்மனுதாரரின் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் உண்மையைதான் சொல்கிறேன். எனது கணவர் ஊர் சிறுங்கட்டூர் கிராமம் ஆகும். எந்த ஆண்டுமுதல் அங்கு வசித்தேன் என்றால் திருமணம் ஆன ஆரம்பத்தில் 3 ஆண்டுகள் வசித்தேன். எந்த ஆண்டு எனக்கு திருமணம் நடந்தது என்றால் 2012 ஆகும். எதிர்மனுதாரரை பற்றி எதுவும் தெரியாது என்றாலும், அவருக்கு பவ்வியப்பட்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல உண்மையைதான் சொல்கிறேன்.

// **உண்மை நகல்** //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.